# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2078 - 2018 ජූනි මස 29 වැනි සිකුරාදා - 2018.06.29

*2078 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 986 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 996 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம் சட்டமூலம் 2018, யூன் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(i) மதுவரி (திருத்தம்) சட்டமூலம் 2018, யூன் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூலை மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

985 - B81426 - 5,403 (2018/ 06)

# பதவிகள் - வெற்றிடம்

## மத்திய மாகாண அரச சேவை வெற்றிடங்களை நிரப்புதல்

கங்க இஹல கோரளே பிரதேச சபை

*மத்திய மாகாண அரச சேவையின் கங்க இஹல கோரளே பிரதேச சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கென கங்க இஹல கோரளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட உரிய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|---|---|
| 1. | சுகாதாரத் தொழிலாளர் தரம் III | 01 | ரூபா 24,250 - 10 X 250- 10 X270 - 10X300 -12 X 330 - ரூ. 36,410 | இரு தடவைக்கு மேற்படாது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் ஐந்து (05) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்கள் தவிர்ந்த) மேற்குறித்த தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் இல்லாத பட்சத்தில் விதிமுறைக் கமைய தரம் ஐந்து (05) சித்தியடைந்துள்ள விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும். |
| 2. | காவற்காரர் தரம் III | 01 | ரூபா 24,250 - 10 X 250- 10 X270 - 10X300 -12 X 330 - ரூ. 36,410 | இரு தடவைக்கு மேற்படாது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் ஐந்து (05) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்கள் தவிர்ந்த) |

**02. ஆட்சேர்ப்புக்கான பொதுவான நிபந்தனைகள் :**

1. விண்ணப்பதாரிகள் வம்சாவழியாகவோ அல்லது பதிவினாலோஇலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கங்க இஹல கோரளே பிரதேச சபையில் நிருவாக எல்லைக்குள் தொடராக 03 வருட கால நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். (வதிவிடச் சான்றிதழை முன்வைத்தல் வேண்டும்)
3. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும்.
4. மேற்காட்டியுள்ள ஒவ்வொரு பதவிக்குமான குறைந்தளவு தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. ஆட்சேர்ப்பு நியமங்களுக்கமைய விண்ணப்பங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரிகள் அனைவரும் கட்டமைப்பான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டுத் தகைமைகள் பரிசோதிக்கப்பட்ட பின்னர் குறித்த பெறுபேறுகளின் மூலம் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

6. விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், இந்த அறிவிப்பைத் திருத்தியமைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் கங்க இஹல கோறளே பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

7. ஏற்கனவே கங்க இஹல கோறளே பிரதேச சபையில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. கங்க இஹல கோறளே பிரதேச சபையில் ஏற்கனவே சமயோசித/பதிலீட்டு/ஒப்பந்த அடிப்படையில் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டு பணியாற்றுவோரது விண்ணப்பங்கள் மீது முன்னுரிமை வழங்கப்படும்.

**03. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

1. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை.

2. உரிய வகையில் அநாதைகள்/விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

3. தெரிவு செய்யப்படுவோர் மூன்று வருடகாலத் தகுதிகாண் சேவைக் காலத்தக்கு உட்படுவர். ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்டோர் 01 வருட காலத்துக்குப் பதிற்கடமைக்கு உட்படும் வண்ணம் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

4. அரச கரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காகவும் விசேடமாக அரச கரும மொழிகள் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் தற்போது ஆக்கப்பட்டுள்ள மற்றும் இதன் பின்னர் ஆக்கப்படவுள்ள ஏற்பாடுகளுக்கமையச் செயற்படுதல் வேண்டும்.

5. ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைத் தாபனக் கோவையின் ஏற்பாடுகள், மத்திய மாகாண சபையின் நிதிப் பிரமாணங்கள், திணைக்களக் கட்டளைகள், மத்திய மாகாண சபை அல்லது மாகாண அரச சேவைகள் ஆணையம் அல்லது கங்க இஹல கோறளே பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் கட்டளைகளுக்கும், நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு அனைத்துப் பணியாளர்களும் உட்படுதல் வேண்டும்.

6. விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். நியமனம் கிடைத்த ஒரு மாத காலத்துக்குள் தகுதி பெற்ற மருத்துவர் ஒருவரால் நடத்தப்படும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும். மருத்துவ பரிசோதனையின் போது தேகாரோக்கியம் பொருத்தமற்றது எனக் காணப்பட்டால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

7. குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது.

8. அரச அல்லது மாகாண அரச சேவையிலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டவராகவோ அல்லது பொது நிருவாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராகவோ இருத்தல் கூடாது.

**04. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாக 8.27" x 11.29" அளவான (A4) தாளின் இரு புறங்களிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2018.07.15 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், கங்க இஹல கோறளே பிரதேச சபை, குருந்துவத்த பஸார்" என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தபாலில் அற்றுப்போகும் அல்லது தவறாக முகவரியிடப்பட்டுத் திருப்பியனுப்பப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில் பொறுப்பேற்கப்பட மாட்டாது. உரிய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. தேசிய ஆள் அடையாள அட்டை ;
3. கல்விச் சான்றிதழ்கள் ;
4. பிரதேச செயலாளரால் கையொப்பமிடப்பட்ட தமது நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்திய தமது பிரிவுக் கிராம அலுவலர் வழங்கிய வதிவிடச் சான்றிதழ் ;
5. தொழிற் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் ;
6. சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் ;
7. அண்மையில் பெறப்பட்ட இரண்டு குண நலச் சான்றிதழ்கள் ;

யூ. ஜீ. ஜயரத்ன,<br>
செயலாளர்,<br>
கங்க இஹல கோறளே பிரதேச சபை.<br>
குருந்துவத்த பஸார்.

2018, யூன் 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கங்க இஹல கோறளே பிரதேச சபை**

................................................................................ பதவிக்கான விண்ணப்பம்

1. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் :- ..........................................................
2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :- ..........................................................
3. நிரந்தர முகவரி :- ..........................................................
4. பிறந்த திகதி :- ஆண்டு .......................... மாதம் :- ..............................திகதி :- ..................................
5. விவாக நிலை : விவாகமானவரா/விவாகமாகதவரா :- ..........................................................
6. இனம் :- ..........................................................
7. இலங்கைப் பிரசையாயின் பிறப்பினாலா? அல்லது பதிவினாலா? :- ..........................................................

8. கல்வித் தகைமைகள் :-

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப் பரீட்சை (...............ஆண்டு)

சுட்டெண் ........................ வருடம் ........................

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

9. 1. ஏனைய தகைமைகள் :-
2. தொழிற் தகைமைகள் :-
3. சேவை அனுபவம் :-
4. அனைத்து கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

10. ஏதேனும் குற்றம் ஒன்றுக்கு நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ் விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் விசுவாசத்திற்கும் உட்பட்ட முறையில் உண்மையானது என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி ................................ .......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(தற்போது அரச சேவையிலுள்ளோருக்கு மாத்திரம்)

இவ் விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................................................................ என்பவர் தற்போது இந்த நிறுவனத்தில்/ திணைக்களத்தில்/ நிரந்தர / சமயோசித/ பதிலீட்டு/ ஒப்பந்த அடிப்படையில் ............................. ஆக கடமையாற்றுகின்றார் என்பதையும் அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் தற்போது அவர் வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுதலை செய்ய முடியும்/முடியாது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

.............................................
திணைக்களத்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

முழுப் பெயர் : ........................................................................................................................

பதவி: ........................................................................................................................

பதவிமுத்திரை : ........................................................................................................................

திகதி : ...........................................

6 - 995

**பியகம பிரதேச சபை**

மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிலுள்ள வெற்றிடங்களை நிரப்புதல்

01. பியகம பிரதேச சபையிலுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | தொழிற் தகைமைகளும் அனுபவமும் |
|---|---|---|---|---|---|
| 01 | நூலக உதவியாளர் III (ஆரம்ப திறன் சாராத) | 01 | PL1 - 2016<br>ரூபா. 24,250 - 10 X 250 -10 X 270 - 10X 300 - 12X330 - ரூ. 36,410 (பொ. நி. சு. 03/2016 இன் பிரகாரம் | வெளிவாரி (திறந்த)<br>க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளில் இரண்டு திறமை சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந் திருத்தல் (இவற்றில் ஐந்து பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.) | வெளிவாரி (திறந்த)<br>பொருத்தமில்லை |
| 02 | சுகாதார தொழிலாளர் III (ஆரம்ப திறன் சாராத) | 02 | PL1 - 2016<br>ரூபா. 24,250 - 10 X 250 -10 X 270 - 10X 300 - 12X330 - ரூ. 36,410 (பொ. நி. சு. 03/2016 இன் பிரகாரம்) | வெளிவாரி (திறந்த)<br>குறைந்தபட்சம் தரம் 8/9 ஆண்டுகள் கழிய வேண்டும். | வெளிவாரி (திறந்த)<br>பொருத்தமில்லை |
| 03 | மயானவாடி இயக்குநர் III (ஆரம்ப அரை திறன் சார்ந்த) | 02 | PL2 - 2016<br>ரூபா. 25,250 - 10 X 270 -10 X 330 - 12X 330 - 12X350 - ரூ. 38,450 (பொ. நி. சு. 03/2016 இன் பிரகாரம்) | உள்வாரி (மட்டுப்படுத்தப்பட்ட)<br>க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளில் இரண்டு திறமை சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந் திருத்தல் (இவற்றில் ஐந்து பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.)<br>வெளிவாரி (திறந்த)<br>குறைந்த பட்சம் தரம் 8/9 ஆண்டுகள் கழிய வேண்டும். | உள்வாரி (மட்டுப்படுத்தப்பட்ட)<br>தொழில் தகைமைகள்<br>தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமைகளில் (NVQ) ஆகக் குறைந்தது இரண்டாம் மட்டப் பரீட்சையிலாவது சித்தி யடைந்திருத்தல் அல்லது ஆகக் குறைந்தது உரிய துறையில் 06 மாத அனுபவத்தைப் பெற்றி ருத்தல் (சான்றிதழின் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும்.)<br>அனுபவம்<br>ஒரு உள்ளூராட்சி சபையில் ஒரு ஆரம்ப மட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் தடை தாண்டல் பரீட்சைகளில் சித்தி யடைந்து 05 வருட நிரந்தர திருப்தியான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஒரு ஊழியராக இருத்தல் |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | தொழில் தகைமைகளும் அனுபவமும் |
|---|---|---|---|---|---|
| | | | | | வெளிவாரி (திறந்த)<br>தொழில் தகைமைகள்<br>தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமைகளில் (NVQ) ஆகக் குறைந்தது இரண்டாம் மட்டப் பரீட்சையிலாவது சித்தி யடைந்திருத்தல் மற்றும் ஆகக் குறைந்தது உரிய துறையில் 06 மாத அனுபவத்தைப் பெற்றி ருத்தல் (சான்றிதழின் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும்.) |
| 04 | வேலை/ கள தொழிலாளர் III (ஆரம்ப திறன் சாராத) | 02 | PL1 - 2016<br>ரூபா . 24,250 10 X 250 -10 X 270 - 10X 300 - 12 X 330 - ரூ. 36,410 (பொ. நி. சு. 03/ 2016 இன் பிரகாரம்) | வெளிவாரி (திறந்த)<br>குறைந்தபட்சம் தரம் 8/ 9 ஆண்டுகள் கழிய வேண்டும். | வெளிவாரி (திறந்த)<br>பொருத்தமில்லை |
| 05 | காவலாளர் தரம் III (ஆரம்ப திறன் சாராத) | 01 | (PL1 - 2016)<br>ரூபா. 24,250 10 X 250 -10 X 270 - 10X 300 - 12 X 330 - ரூ. 36,410 (பொ. நி. சு. 03/ 2016 இன் பிரகாரம்) | வெளிவாரி (திறந்த)<br>க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளில் இரண்டு திறமை சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந் திருத்தல் (இவற்றில் ஐந்து பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.) | வெளிவாரி (திறந்த)<br>பொருத்தமில்லை |
| 06 | சாரதி III (ஆரம்ப திறன் சாராத) | 01 | (PL1 - 2016)<br>ரூபா. 25,790 -10 X 270 - 10X 300 -10X330 - 12 X 350 - ரூ. 38,990 (பொ. நி. சு. 03/ 2016 இன் பிரகாரம்) | வெளிவாரி (திறந்த)<br>க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாத தடவைகளில் சிங்களம்/ தமிழ் மொழி உள்ளடங்கலாக திறமைச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி யடைந்திருத்தல் - (ஒரே அமர்வில் (05) பாடங்கள் குறைந்த பட்சம் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.) | வெளிவாரி (திறந்த)<br>தொழில் தகைமைகள்<br>(i) தனியார்/வாடகை வாகனம் மற்றும் தார் நிறை 34 அந்தர்களுக்குக் குறைவான ஸ்டேசன் வெகன் வாகனத்தை செலுத்துதல் தொடர்பான மோட்டார் வாகன போக்கு வரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களைச் செலுத்து வதற்கான அனுமதிப்பத்திரமொன்றை பெற்றிருத்தல் |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | தொழில் தகைமைகளும் அனுபவமும் |
|---|---|---|---|---|---|
| | | | | | வெளிவாரி (திறந்த)<br><br>தொழில் தகைமைகள்<br><br>(ஆட்சேர்ப்புச் செய்யும் தினத்திற்கு மூன்று வருடங்களுக்கு (03) குறைந்த பட்சம் ''சீ'' மற்றும் ''சீ 1) வாகன வகுப்பைச் சேர்ந்த வாகனமொன்று அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு ஏற்ப ''ஆ'' வகுப்பைச் சேர்ந்த அனுமதிப்பத்திரமொன்றை கொண்டிருத்தல்.<br><br>(ii) பெருந்தோட்ட சட்டக் கோவை பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல்.<br><br>அனுபவம்<br><br>அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் சாரதியாக குறைந்த பட்சம் மூன்று வருட (03) அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (அனுபவத்தை பொருத்தமான சான்றிதழ்களின் ஊடாக உறுதிப்படுத்தல் வேண்டும்)<br><br>உடற் தகைமைகள்<br><br>(i) குறைந்த பட்சம் உயரம் ஐந்து அடி (5') ஆக இருக்க வேண்டும்.<br><br>(ii) பகல் வேளையில் மற்றும் இரவு நேரங்களில் சேவையில் ஈடுபடும் பொருட்டு உடல் ரீதியாக தேக ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டியதுடன் சிறந்த கண்பார்வை இருத்தல் வேண்டும். அரச மருத்துவர் ஒருவரினால் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

**02. ஆட்சேர்ப்புத் திட்டம் :**

(i) 01, 02, 03, 04, 05 ஆம் இலக்கங்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள வெற்றிடங்கள் தொடர்பாக, நடைமுறை விடயங்கள், ஆளுமை தொடர்பில் பதவி, அனுபவம், அறிவு தொடர்பான பிரயோக அறிவு பற்றி பரீட்சிக்கும் பொருட்டு கட்டமைப்பான நேர் முகப் பரீட்சையொன்று நடைபெறும். கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக மேற்படி விடயங்களும் பரீட்சிக்கப்படும். இந்தப் பரீட்சையில் அதிக கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளின் தொடர் ஒழுங்கில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(ii) வாகனம் செலுத்தும் இயலுமை, பெருந்தெருக்களின் குறியீடுகள் மற்றும் மோட்டார் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு பற்றி புரிந்து கொள்வதற்காக 06 ஆம் இலக்கத்தின் கீழ் விபரிக்கப்பட்ட பதவி தொடர்பாக தொழில்சார் பரீட்சை யொன்று நடைபெறும். இந்தப்பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளின் தொடர் ஒழுங்கில் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**03. வயது :**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரச அல்லது அரச மாகாண சேவைகளில் ஏற்கனவேயுள்ளவர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடைய தாகாது.)

**04. ஏனைய தகைமைகள் :**

1. விண்ணப்பதாரர்கள் பரம்பரையாக அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

2. உயர்ந்த நல்லொழுக்கமும் உடலாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பங்கள் அழைக்கப்படும் திகதிக்கு மேல் மாகாணத்தில் மூன்று வருட காலம் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். (வதிவிடம் தேர்தல் இடாப்பினால் கிராம உத்தியோகத்தரினால் (கி. உ)/பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும்.)

4. அரச/மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஒருவராக 44/90 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் கீழ் ஓய்வூதியத்தைப் பெறும் ஒருவராக இருத்தல் ஆகாது.

5. விண்ணப்பதாரர்கள் தண்டனை விதிக்கோவையின் பிரகாரம் ஏதாவது ஒரு நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் கணிக்கப் பட்டிருத்தல் ஆகாது.

6. தேவை எழும் பட்சத்தில் பிணைமுறியை அல்லது காப்புறுதிச் சான்றிதழ் சமர்ப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

**05. பொது நிபந்தனைகள்**

i. கடமைகளை நிறைவேற்றுவதற்கு உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பொருத்தமுடையவராகவும் நல்ல உடலாரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

ii. இந்தப் பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். (ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு இயைந்தொழுக வேண்டும்)

iii. நியமனம் மூன்று வருட நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டதாக இருக்கும்.

iv. நன்னடத்தை கால முடிவில் பணியில் நிரந்தரமாக்கல் கருத்திற்கொள்ளப்படும்.

v. நியமனத் திகதியிலிருந்து 3 வருடங்களுக்குள் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

vi. அரசாங்கத்தின் மொழிக் கொள்கைகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

vii. பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

viii. நீங்கள் சமர்ப்பித்த கல்வித் தகைமைகள் ஏனைய தகைமைகள் என்பன பொய்யானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் ஆட் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னரும் கூட எந்த விதமான அறிவித்தலுமின்றி உங்களின் நியமனம் முடிவுறுத்தப்படும்.

ix. இவை தவிர தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், நிதிப் பிரமாணக்குறிப்புகள், மேல் மாகாண சபையின் கௌரவ ஆளுநரினால் விடுக்கப்படும் ஏதாவது கட்டளைகள் மற்றும் மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அவ்வப்பொழுது விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் திணைக்களக் கட்டளைகள் என்பவற்றுக்கும் இயைந்தொழுக வேண்டும்.

**06. விண்ணப்பங்கள்**

இந்த அட்டவணையில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தானாகத் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 2018.07.13 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், பியகம பிரதேச சபை, தெல்கொட" என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தைத் தாங்கி வருகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் தபாலில் தொலைந்து போன விண்ணப்பங்களுக்கு பொறுப்புக்கூறப்பட மாட்டாது.

07. தகுதியான விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

08. பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பங்களோடு இணைத்து அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) கல்விச் சான்றிதழ்கள் ;

(iii) தேசிய அடையாள அட்டையின் பிரதி ;

(iv) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட்டு பிரதேச செயலாளரினால் புறக்குறிப்பிடப்பட்ட கடிதம் ;

(v) இரண்டு நற் சான்றிதழ் பத்திரங்கள் (ஒரு சான்றிதழ் வசிக்கும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாக இருத்தல்) ;

(vi) தொழில் தகைமைகளையும் ஏனைய தகைமைகளையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(vii) தொழிலை உறுதிப்படுத்தும் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்.

09. மேல் மாகாண சபையிலுள்ள இந்தப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளையும், நியதிச்சட்டங்களையும் திருத்துதல், ஆட்சேர்ப்பை தாமதித்தல், நடைமுறைகளை பிரதியீடு செய்தல், மாற்றுதல், இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல் முதலிய அனைத்துக்குமான அதிகாரத்துவம் பியகம பிரதேச சபையின் செயலாளருக்குரியதாகும்.

வசந்தி விக்ரமரட்ன,
பிரதேச செயலாளர்,
பியகம.

2018, யூன் 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பியகம பிரதேச சபை**

.......................................................................... பதவிக்கான விண்ணப்பம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :..............................................................................................

2. முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் : ...........................................................................

3. நிரந்தர முகவரி :...............................................................................................................

4. பிறந்த திகதி : ஆண்டு : ......................... மாதம் : .............................திகதி : ..................................

5. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அன்று வயது :

வருடங்கள் :......................... மாதங்கள் : ............................ நாட்கள் : ..................................

6. சிவில் அந்தஸ்து : ......................................................................................

7. தேசிய இனம் : ..........................

8. நீங்கள் இலங்கைப் பிரஜையா? பதிவு மூலமா : ............... வம்சா வழியிலா ..................................

9. கல்வித் தகைமைகள் : .................................................................................................

10. தொழில் தகைமைகள் : ...........................................................................

11. அனுபவம் : தாபனம் : ..............................................................................

பதவிப்பெயர் : ......................................................................

சேவைக் காலம் : ......................................................................

12. நீங்கள் இதே பிரதேச சபைக்கு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளீர்களாயின் :

i. தற்போதைய பதவி :- ..................................................................................

ii. நியமனத் திகதி : .......................................................

iii. நியமனத்தின் வகை (நிரந்தரம்/அமைய/இரண்டாம் நிலை/ஒப்பந்த) : ..............................................

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என சான்றளிக்கின்றேன். இதில் அடங்கியுள்ள ஏதாவது விபரங்கள் இந்தப் பதவிக்கு நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் பிழை அல்லது பொய்யானது எனக் கண்டுபிடிக்கப் பட்டால் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் எந்தவிதமான நஷ்ட ஈடுகளுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாகுவேன் என்றும் நன்கறிவேன்.

திகதி ................................ .......................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

6 – 1105

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ரிதீகம பிரதேச சபை

*2018.05.11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2071 ஆம் இலக்க வர்த்தமானியில் IV(ஆ) பகுதியில் உள்ளூராட்சி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள எகொடமுல்ல சமாகம்வத்த பாதை பற்றி பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைப்படி இத்தால் திருத்தம் செய்யப்படும்.*

*இது சம்பந்தமாக பிரதேசத்தில் உள்ள பொதுமக்களினால் அல்லது ஒழுங்கைகளுக்குரிய காணிகளின் உரிமையாளர்களாக உரிமைக் கோருபவர்களினால் அல்லது ஏதாவது எதிர்ப்பு தெரிவிப்பதாயின் இவ் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் ஒரு மாதத்தினுள் தமது உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின் படி செயற்படுவதற்கு அறிவித்தல் விடுக்கப்படும்.*

*இக்காலத்தினுள் ஏதாவதொரு எதிர்ப்பு தெரிவிக்கப்படாதவிடத்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கைகள் பிரதேச சபைக்குரிய ஒழுங்கைகளாக ஏற்றுக் கொண்டு நிருவகிக்கப்படும் என்பதனை பொது மக்கள் தெரிந்துக் கொள்வதற்காக இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

கே. வில்பட் குலதுங்க,
*தலைவர்,*
*ரிதீகம பிரதேச சபை.*

**அட்டவணை**

| பாதையின் பெயர் | பாதையின் ஆரம்பம் | முடிவு | பாதையின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை இடது பக்க காணி உரிமையாளர்களின் பெயர்கள் | பாதையின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை வலது பக்க காணி உரிமையாளர்களின் பெயர்கள் | கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கமும் | பாதையின் நீளம் அடி | பாதையின் அகலம் அடி |
|---|---|---|---|---|---|---|---|
| எகொட முல்ல சமாகம் வத்த பாதை | கல்லவ தொடக்கம் எகொடமுல்ல வரையிலான தெருவின் திரு. ஜீ. ஜீ. சரத் அமர சிங்ஹ அவர் களின் வீட்டின் ஆரம்பித்தல் | திரு. ஜீ. ஜீ. ஆனந்த ஜயகொடியின் காணி வரை | 1. திரு. ஜீ. ஜீ. அமரசிங்ஹ<br>2. திரு. ஈ. டீ. அமில சாலித ஜயசிங்ஹ<br>3. திருமதி ஆர். ரம்யா கமல் குணரத்ன<br>4. திருமதி ஆர். லலனி ரசிகா குணரத்ன<br>5. திருமதி ஆர். டபிள்யூ. ஆர். எம். ஏ. மதுபாசினி ரணவாரண<br>6. திரு. ஆர். டீ. சுனில் ஜயசூரிய<br>7. திரு. டீ. ஜீ. அனில் குமார விமலசேன<br>8. திரு. டீ. ஜீ. சந்தன சமன் குமார<br>9. திரு. ஜீ. ஜீ. ஆனந்த ஜயகொடி | 1. திரு. ஈ. டீ. அமில சாலித ஜயசிங்ஹ<br>2.திருமதி ஆர். ரம்யா கமல் குணரத்ன<br>3. திருமதி ஆர். லலனி ரசிகா குணரத்ன<br>4. திருமதி ஆர். டபிள்யூ. ஆர். எம். ஏ. மதுபாசினி ரணவாரண<br>5. திரு. ஆர். டீ. சுனில் ஜயசூரிய<br>6. திரு. டீ. ஜீ. அனில் குமார விமலசேன<br>7. திரு. எம். டீ. ஜயதிஸ்ஸ<br>8. திரு. ஜீ. ஜீ. ஆனந்த ஜயகொடி | 576 கல்லவ | 1435 அடி | 10 அடி |

6 - 967

## நீர்கொழும்பு மாநகர சபை

வரவு செலவுத்திட்ட அறிக்கை - இலக்கம் 01

*நீர்கொழும்பு மாநகர சபையின் 2018.07.05 ஆந் திகதி நடைபெறவுள்ள மா நகர பொதுக்கூட்டத்தில் 2018 ஆம் வருடம் 01 ஆம் இலக்க குறை நிரப்பு வரவு செலவுத்திட்ட அறிக்கை பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படவிருப்பதால், அவ்வேடு 2018.06.26 ஆந் திகதி முதல் 07 தினங்களுக்கு பொது மக்கள் பார்வைக்காக அலுவலகத்தில் வைக்கப்படவுள்ளதென (252 ஆம் அத்தியாயம்) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 214 (ஆ) பிரிவின் கீழ் அறிவிப்புச் செய்கின்றேன்.*

டபிள்யூ. எம். தயான் லான்சா,
மாநகர முதல்வர்,
மாநகர சபை,
நீர்கொழும்பு.

6 - 95

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.